**செய்தி வெளியீட்டு எண்.76** **நாள்: 25.1.10**

சென்னை மாநகர் (ம) புறநகர் பகுதிகளில் உள்ள மயிலாப்பூர், தாம்பரம், ஆயிரம்விளக்கு, இராயபுரம், அம்பத்தூர், சேப்பாக்கம் மற்றும் சிதம்பரனார் ஆகிய மண்டலங்களில் புழக்கத்திலுள்ள குடும்ப அட்டைகளை 100% வீடு வீடாகச் சென்று தணிக்கை செய்யும் பணி முடிக்கப்பட்டுள்ளது. தணிக்கையின்போது இல்லாத குடும்பங்கள் மற்றும் முகவரி மாறிய குடும்பங்களின் குடும்ப அட்டைகளுக்கு பொருள் வழங்கல் நிறுத்தம் ஆணைகள் சம்மந்தப்பட்ட உதவி ஆணையாளரால் பிறப்பிக்கப்பட்டு நியாய விலை அங்காடியில் 25.01.2010 முதல் விளம்பரப்படுத்தப்பட உள்ளது.

இந்த பொருள் நிறுத்தம் ஆணைகள் தொடர்பாக முறையீடு செய்ய ஏதுவாக இதுகாறும் பொருள் பெற்று வந்த நியாய விலை அங்காடியிலேயே முறையீடு படிவம் அச்சடித்து இலவசமாக வழங்கப்படுகிறது. அந்த படிவங்களை பெற்று அதில் விவரங்களை பூர்த்தி செய்து குடும்ப அட்டை நகல் மற்றும் ஏதேனும் ஒரு இருப்பிட ஆதார (வாக்காளர் அடையாள அட்டை நகல், வீட்டு வரி ரசீது நகல், ஓட்டுநர் உரிம நகல், பாஸ;போர்ட் நகல்,எரிவாயு சிலிண்டர் நிரப்பு ரசீது, அஞ்சல் துறை வழங்கும் இருப்பிட அடையாள அட்டை நகல், வங்கி சேமிப்பு புத்தக நகல், மின் இணைப்பு அடையாள அட்டை(முகவரியுடன்) நகல், தொலைபேசி கட்டண இரசீது நகல் ஆகியவற்றில் ஏதேனும் ஒன்று) நகலை இணைத்து நியாய விலைக்கடையிலேயே கொடுத்து ஒப்புதல் சீட்டு பெற்றுக் கொள்ள வேண்டும். முறையீடு மனுக்கள் 27.02.2010 -க்குள் அங்காடியில் கொடுக்கப்பட வேண்டும். அசல் குடும்ப அட்டையை கடையில் கொடுக்கக்கூடாது, அட்டைதாரரே தன்வசம் வைத்துக்கொள்ளவேண்டும்.

அங்காடியில் முறையீடு மனு அளித்து ஒப்புதல் சீட்டு பெற்றுக்கொண்ட குடும்ப அட்டைதாரர்களுக்கு அவர்களது முறையீடு மீதான இறுதி ஆணை பிறப்பிக்கப்படும் வரை தொடர்ந்து பொருள் வழங்கப்படும். இந்த மனுக்கள் மீது நேரடி விசாரணை செய்து உண்மையில் வசிப்பவர்கள் கண்டறியப்பட்டு தகுதியற்ற அட்டைகள் இரத்து செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். தகுதியுள்ள உண்மையில் வசிக்கும் குடும்பங்களுக்குரிய குடும்ப அட்டைகளுக்கு பொருட்கள் தொடர்ந்து வழங்கப்படும். எனவே உண்மையான குடும்ப அட்டைதாரர்கள் எவரும் இது தொடர்பாக கவலை அடையத் தேவையில்லை.

மேலும் பொருள் நிறுத்தம் தொடர்பாக உதவி ஆணையர் அலுவலகங்களுக்கு சென்று அலைய வேண்டாம் என குடும்ப அட்டைதாரர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

பொருள் நிறுத்த ஆணையில் இடம்பெறாத குடும்ப அட்டைதாரர்கள் அவர்கள் பொருள்கள் பெற்றுவரும் கடையிலேயே தொடர்ந்து பொருள்கள் பெற்றுக்கொள்ளலாம். இந்த பட்டியலில் இடம்பெறாத பொருள் பெற்று வரும் தகுதியான குடும்ப அட்டைதாரர்கள் முறையீடு மனுவோ, குடும்ப அட்டையின் நகல் ஏதும் (xerox copy) கடையில் கொடுக்கத்தேவையில்லை.

இந்த மண்டலங்களை சேர்ந்த குடும்ப அட்டைதாரர்கள் அவர்களது குடும்ப அட்டை பொருள் வழங்கல் நிறுத்த ஆணையில் இடம் பெற்றுள்ளதா என்பதனை இத்துறையின் இணையதளமான http://www.consumer.tn.gov.in/cardstatus -ல் இன்று முதல் அறிந்து கொள்ள வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது. தங்களின் குடும்ப அட்டை தற்காலிக பொருள் நிறுத்த ஆணையில் இடம்பெற்றிருந்தால் இதே இணையதளத்திலுள்ள முறையீட்டு மனுவினை தரவிறக்கம் (Download) செய்து மனுவினை பூர்த்தி செய்து இணைப்புகளுடன் சம்பந்தப்பட்ட நியாய விலைக்கடையில் நேரில் கொடுத்தும் ஒப்புதல் பெற்றுக்கொள்ளலாம்.

இது தவிர இந்த மண்டலங்களைச் சேர்ந்த குடும்ப அட்டைதாரர்கள் பி.எஸ்.என்.எல். (BSNL) செல்லிடை தொலைபேசி சேவை குறுஞ்செய்தி தகவல் மூலம் அவர்களது குடும்ப அட்டை பொருள் வழங்கல் நிறுத்த ஆணையில் இடம் பெற்றுள்ளதா என்பதனை அறிந்துகொள்ளலாம். உதாரணமாக 02/G/0536496 என்ற அட்டையின் எண் உள்ள குடும்ப அட்டைதாரர் பதிவு செய்யவேண்டும் எனில் " **CARD 02G0536496** " என செல்பேசியில் தட்டச்சு செய்து, **54368** என்ற எண்ணிற்கு குறுந்தகவல் (SMS) அனுப்பி விவரம் தெரிந்துகொள்ளலாம். இந்த SMS வசதியினை 28.01.2010 முதல் பயன்படுத்தலாம்.

இது பற்றி சந்தேகங்கள் இருப்பின் குடும்ப அட்டைதாரர்கள் கீழ்க்கண்ட தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளலாம்.

| வ.எண் | மண்டலங்கள் | தொலைபேசி எண்கள் | துணை / உதவி ஆணையாளர்களின் செல்லிடபேசி எண்கள் |
|---|---|---|---|
| 1 | துணை ஆணையர்(நகரம்) தெற்கு | 28551026 | 9445000160 |
| 2 | மயிலாப்பூர் | 24642613 | 9445000162 |
| 3 | தாம்பரம் | 22262737 | 9445000164 |
| 4 | ஆயிரம்விளக்கு | 26421205 | 9445000166 |
| 5 | சேப்பாக்கம் | 28544934 | 9445000167 |

| வ.எண் | மண்டலங்கள் | தொலைபேசி எண்கள் | துணை / உதவி ஆணையாளர்களின் செல்லிடபேசி எண்கள் |
|---|---|---|---|
| 1 | துணை ஆணையர்(நகரம்)வடக்கு | 28551028 | 9445000152 |
| 2 | இராயபுரம் | 25953285 | 9445000158 |
| 3 | அம்பத்தூர் | 26570570 | 9445000156 |
| 4 | சிதம்பரனார் | 25267603 | 9445000159 |

**மாநில நுகர்வோர் சேவை மையம் :- 28592828**

முன்னதாக சென்னை நகரில் முதற்கட்ட தணிக்கை மேற்கொள்ளப்பட்ட பெரம்பூர், திருவொற்றியூர், வில்லிவாக்கம், ஆவடி, தி.நகர், சைதாப்பேட்டை, பரங்கிமலை, சோழிங்கநல்லூர், ஆகிய மண்டலங்களில் பொருள் நிறுத்த ஆணைகள் வழங்கப்பட்ட குடும்ப அட்டைகளுக்கு முறையீடு, உரிய ஆவணங்களுடன் சமர்ப்பிக்க கடைசி தேதி 30.01.2010 என்பதால் தகுதியுள்ள அட்டைதாரர்கள் பூர்த்தி செய்யப்பட்ட மனுவினை ஆவணங்களுடன் சம்பந்தப்பட்ட கடையில் 30.01.2010 -க்குள் சமர்ப்பித்து ஒப்புதல் சீட்டு பெற்றுக் கொள்ளவேண்டும்.

(ஒம்.) க. ராஜாராமன்,
ஆணையாளர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.**